**ஜனாதிபதியின் நிதியம் - 2017**

---

ஜனாதிபதியின் நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றும் ஏனைய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1978 இன் 7 ஆம் இலக்க ஜனாதிபதியின் நிதியச் சட்டத்தின் பிரிவு 9(2) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதியச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் நிதி அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அச் சட்டத்தினால் 9(4) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நிதியத்தின் வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பாக மற்றும் நிதியத்திற்கு சொந்தமான நிதி முதலீடு செய்தல் தொடர்பான கூற்றும் இணைப்பு 01 எனவும் உட்படுத்தி, நிதியத்தில் விவகாரங்களை நிருவகித்தல் தொடர்பான அறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, ஜனாதிபதி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 நிதிக் கூற்றுக்கள் சமர்பித்தல்**

கணக்காய்விற்காக சமர்பித்திருந்த ஜனாதிபதியின் நிதியத்தின் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றக்கள் நிதியத்தின் நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்**

**இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01**

(அ) நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளின் பிரகாரம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இனங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என சுட்டிக்காட்டியிருந்தது. அதன் பிரகாரம் நியமத்தின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் அட்டுறு அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டுமெனினும் நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் பணம் மற்றும் அட்டுறு இரண்டு அடிப்படைகள் இரண்டையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) நியமத்தின் 53 ஆம் பந்தியின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுகளில் உள்ளடங்கிய உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்றில் மற்றும் கணக்கு பதிவுகளில் ஒப்பீட்டு அடிப்படையிலான தகவல்கள் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) நியமத்தின் 76 (இ) பிரகாரம், சொத்து ஒன்று அறிக்கையிடும் தினத்தில் இருந்து 12 மாதங்களுக்குள் தேறும் என எதிர்பார்க்கப்படும் எனின், அந்தச் சொத்துகளை நடைமுறைச் சொத்துக்கள் என வகைப்படுத்தப் பட வேண்டும் எனினும், 2018 திசெம்பர் 31 திகதிக்கு முன்னர் முதிர்வடையவுள்ள ரூபா 1,543.7 மில்லியனுக்கான நிலையான வைப்புக்கள் நடைமுறை அல்லாத சொத்துக்கள் என வகைப்படுத்தப்பட்டு காட்டப்பட்டிருந்தது.

(ஈ) நிதியத்தின் 21 (ஊ) இன் பிரகாரம் நிதியத்தின் நிதி செயலாற்றுகையின் கூற்று தொடர்பாக விரிவான கணக்கு பதிவுகள் மற்றும் நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்டிருந்த இந்திய பிரதி தூதரகத்தில் பேணப்பட்டு வருகின்ற கட்டுநிதி ரூபா 6 மில்லியன் மற்றும் தேசிய வீட்டமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கியிருந்த ரூபா 161 மில்லியனிற்கான கடன் மீதியுடன் தொடர்புடைய விரிவான தகவல்கள் நிதிக் கூற்றுகளின் குறிப்புகளின் கீழ் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டு கொள்கைகள்

நிதியத்தின் நிதிச் செயலாற்றுகை கூற்றில் காணப்படும் வருமானங்களை இனங்காண்பதற்கு உரிய கொள்கை மற்றும் அடிப்படை நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) மீளாய்வாண்டின் போது மஹபொல புலமை பரிசில் நிதியத்திற்காக அபிவிருத்தி லொத்தர் சபையில் இருந்து கிடைத்திருந்த ரூபா 102 மில்லியன் ஜனாதிபதி நிதியத்தின் வருமானம் ஒன்று செலவு ஒன்றென இனங்கண்டிருந்தமையினால் நிதியத்தின் வருமானம் மற்றும் செலவுகள் அப்பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) அஸ்பெஸ்டோர்ஸ் தகடுகளுக்கு பதிலாக மாற்று பொருள் ஒன்றினை அறிமுகப்படுத்துவதற்கு ஆய்வு மேற்கொள்ளும் நபர்களுக்கு வெகுமதி வழங்குவதற்காக நிதியம் ஒன்று நிறுவுவதற்காக 2015 ஆண்டின் போது நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த ரூபா 100,000 தொகை, வருமானத்திற்கு எடுக்காப்படாமல் மீளாய்வாண்டு இறுதிவரையும் நிதிக் கூற்றுக்களில் நடைமுறை பொறுப்புகள் என காட்டப்பட்டிருந்தன.

### 2.3 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்

2017 ஜுலை 01 முதல் 2017 திசெம்பர் 31 திகதி வரை நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு கொடுப்பனவுகளுக்காக நிதியத்தின் நிருவாக சபையின் அங்கீகாரம் 2018 அக்டோபர் 18 திகதி வரையும் பெற்றிருக்கவில்லை.

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதி விளைவுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 76,972,038 இற்கான பற்றாக்குறை ஒன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய அண்டின் பற்றாக்குறை ரூபா 183,809,157 தொகையாக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 106,837,119 இற்கான வளர்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது . மீளாய்வாண்டின் போது அபிவிருத்தி லொத்தர் சபையில் இருந்து பெறுவனவு ரூபா 1,269,395,805 இனால் குறைந்திருந்த போதிலும், மஹபொல புலமை பரிசில் நிதியத்தின் பங்களிப்பு ரூபா 665,229,488 இனால் குறைவடைதல் மற்றும் திறைசேரி மானியம் ரூபா 772,877,300 இனால் அதிகரித்தல் மேற்கூறிய நிதி விளைவுகளின் வளர்ச்சிக்கு முக்கியமான காரணமாக இருந்துள்ளது.


## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் கடந்த மூன்று வருடங்களின் போது நிதியத்தின் மிகை / பற்றாக்குறை மற்றும் தேறிய சொத்துக்களின் நிலைமை கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஆண்டு | வருமான மிகை/ (பற்றாக்குறை) | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தேறிய சொத்துக்களின் நிலைமை |
|---|---|---|
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| 2014 | 475 | 2,674 |
| 2015 | 159 | 2,499 |
| 2016 | (184) | 2,296 |
| 2017 | (77) | 2,227 |

**வருமான மிகை (பற்றாக்குறை) மற்றும் தேறிய சொத்துக்களின் நிலைமை**




சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுகளின் பிரகாரம் 2014 ஆண்டின் போது நிதியத்தின் செயற்பாட்டு அலுவல்களின் மூலம் ரூபா 475 மில்லியன் இற்கான தேறிய மிகை ஒன்றினை பெற்றிருந்ததுடன், 2016 ஆண்டின் போது அது ரூபா 184 மில்லியனிற்காக தேறிய பற்றாக்குறை ஒன்று வரை இடையறாமல் வீழ்ச்சி அடைந்திருந்தது. எனினும், 2016 ஆண்டிற்கு ஒப்பாக 2017 ஆண்டின் போது தேறிய பற்றாக்குறை 58.15 சதவீதத்தினால் அதாவது ரூபா 107 மில்லியனினால் குறைந்திருந்த போதிலும் 2014 ஆண்டிலிருந்து முதல் 2016 ஆண்டு வரை நிதியத்தின் தேறிய சொத்துக்களின் நிலையை ரூபா 2,674 மில்லியனில் இருந்து ரூபா 2,227 மில்லியன் வரை இடையறாமல் அரிப்படைந்துள்ளது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நிதியத்தின் மொத்த வருமானத்தில் 24.81 சதவீதமாகிய ரூபா 501.71 மில்லியன் தொகை அபிவிருத்தி லொத்தர் சபையில் இருந்து கிடைத்திருந்ததுடன், கடந்த ஆண்டின் போது அபிவிருத்தி லொத்தர் சபையில் இருந்து கிடைத்திருந்த ரூபா 1,771.10 மில்லியன் வருமானத்துடன் ஒப்பீடு செய்யும் போது அது ரூபா 1,269.40 மில்லியனினால் அதாவது 71.67 சதவீதத்தினால் குறைந்திருந்தது. 2001 ஆண்டு முதல் 2009 ஆண்டு வரையான காலப் பகுதிக்காக அபிவிருத்தி லொத்தர் சபையினால் செலுத்தப்பட வேண்டிய வருமான வரி செலுத்தாமையால் நிலுவையாக காணப்பட்ட வருமான வரி மீதியினை செலுத்துவதற்காக 2017 ஆண்டின் போது ரூபா 1,314 மில்லியனிற்கான தொகை ஒன்று ஒதுக்கப்பட்ட காரணத்தினால், அபிவிருத்தி லொத்தர் சபையினால் ஜனாதிபதி நிதியத்திற்கு அனுப்பக் கூடியதொகை குறைந்திருந்ததென கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது. எவ்வாறாயினும் நிதியத்தின் செலவுகளை தீர்ப்பதற்காக ரூபா 772.88 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது திறைசேரியினால் வழங்கியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நிதியத்தினால் மருத்துவ உதவி, பண்பாட்டு அலுவல்கள், மதவிவகாரங்கள், நலன்புரி அலுவல்கள், கல்வி விவகாரங்கள், விளையாட்டுத்துறை மற்றும் கலை அலுவல்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புலமைப்பரிசில்கள் வழங்குவதற்காக ரூபா 1,536.69 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. அம் மொத்தச் செலவின் அமைப்பு மருத்துவ உதவிக்காக 88.12 சதவீதமும், பண்பாட்டு அலுவல்களுக்காக 0.22 சதவீதமும், மத விவகாரங்களுக்காக 0.003 சதவீதமும், நலன்புரி விவகாரங்களுக்காக 0.52 சதவீதமும், கல்விசார் விவகாரங்களுக்காக 0.007 சதவீதமும், விளையாட்டுத்துறை மற்றும் கலை விவகாரங்களுக்காக 0.07 சதவீதமமும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புலமைப்பரிசில்களுக்காக 11.06 சதவீதமும் ஆக அமைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக நிதியத்தின் ஒவ்வொரு செலவுகள் தொடர்பாக பகுப்பாய்வு ஒன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவுத் தொகுதி | 2017 ஆண்டிற்கான செலவு | 2016 ஆண்டிற்கான செலவு | செலவுகளில் (குறைவடைதல்) / அதிகரித்தல் | 2016 ஆண்டிற்கு ஒப்பாக செலவுகள் குறைவடையும் / அதிகரிக்கும் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மருத்துவ உதவி | 1,354,130,788 | 1,288,493,432 | 65,637,356 | 5.09 |
| பண்பாட்டு அலுவல்கள் | 3,400,000 | 3,800,000 | (400,000) | 10.53 |
| மத விவகாரங்கள் | 50,000 | 5,012,500 | (4,962,500) | 99.00 |
| நலன்புரி அலுவல்கள் | 7,950,000 | 9,632,000 | (1,682,000) | 17.46 |
| கல்விக்கான விவகாரங்கள் | 109,000 | 2,350,000 | (2,241,000) | 95.36 |
| புலமைபரிசில்கள் வழங்குதல் | 170,046,000 | 125,867,470 | 44,178,530 | 35.10 |
| விளையாட்டுத்துறை மற்றும் கலை விவகாரங்கள் | 1,000,000 | 2,974,500 | (1,974,500) | 66.38 |

மருத்துவ உதவிகள் மற்றும் உள்நாட்டு புலமை பரிசில்கள் வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக முறையே 5.09 சதவீதத்தினால் மற்றும் 35.10 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்ததுடன் ஏனைய செலவுகள் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 10 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் குறைந்திருந்தது 2018 கா.பொ.த உயர்தர புலமை பரிசில் பெறுவோருக்கு இரண்டு தவணைகளில் செலுத்தும் மாணவ உதவி தேவையான தகவல்களை உறுதிப்படுத்திய பின்னர் 2017 ஆண்டின் போது செலுத்தி முடித்திருத்தல் புலமை பரிசில் வழங்கியதற்கான மேற்கொள்ளப்பட்ட செலவுகளில் வளர்ச்சியை பாதித்துள்ளது.

(இ) மீளாய்வாண்டின் போது நிதியத்தினால் மருத்துவஉதவி வழங்குவதற்காக ரூபா 1,354.13 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அவற்றில் மக்கள் பிரதிநிதிகள் என தெரிவு செய்யப்பட்டிருக்கும் மற்றும் அவ்வாறு முன்னர் இருந்த 09 பேர்களுக்காக ரூபா 12.4 மில்லியன் தொகையும், ஏனைய அனைத்து தரப்பினரும் அதாவது எஞ்சிய மக்களுக்கான 8,864 தொகை மருத்துவ உதவித் தேவைகளுக்காக ரூபா 1,341.73 மில்லியன் தொகையும் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், எஞ்சிய மக்களுக்கான மருத்துவஉதவித் தேவைகளுக்காக செலவிடப்பட்ட தொகை நிதியத்தின் மொத்த மருத்துவஉதவிச் செலவில் 99 சதவீதத்தினை பிரதிநிதிதுவப்படுத்தியது கடந்த ஆண்டுகளை போலவே மீளாய்வாண்டின் போதும் சாதாரண நபர் ஒருவருக்கு செலுத்தியிருந்த மருத்துவ உதவியின் சராசரி பெறுமதிக்கு ஒப்பாக மிகவும் கூடிய சராசரி பெறுமதியைக் கொண்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு அல்லது அவ்வாறு முன்னர் இருந்த நபர் ஒருவருக்கு மருத்துவஉதவி செலுத்தப்பட்டிருந்ததுடன் அது தெளிவாக தோற்றக் கூடிய மட்டத்தில் காணப்பட்டது.

(ஈ) மருத்துவ உதவி வழங்கும் போது 34 நோயாளிகளுக்காக பல்வேறு நோய்களுக்காக நிதியத்தில் உள்ளக கொள்கைகளுக்கு அமைவாகவுள்ள அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளை மிகைத்து ரூபா 28.83 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் மேலே 3.2 இன் பிரகாரம் நிதியத்தில் காணப்படும் சீரற்ற நிதி நிலைமை தொடர்பாக கவனம் செலுத்தும் போது, குறிப்பிட்ட வரையறைகளை மிகைத்து எந்த தரப்பினருக்கும் மருத்துவ உதவி வழங்கப்படின் அங்கு கடைபிடிக்க வேண்டிய நியாயப்படுத்தக் கூடிய குறிப்பிட்ட மூலப் பிரமாணங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் நிதியத்தின் செலவுகளை சிறந்த முறையில் முகாமைத்துவப்படுத்துவது பொருத்தம் என அவதானிக்கப்பட்டது.

(உ) மீளாய்வாண்டின் போது இருதய சத்திரசிகிச்சைகள், புற்று நோய், சிறுநீரக நோய், மூலை சம்பந்தப்பட்ட நோய்கள் மற்றும் ஏனைய சிகிச்சைகளுக்காக 8,873 நோயாளிகளுக்கு மருத்துவஉதவியாக ரூபா 1,354,13 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் கடந்த ஆண்டின் போது 8,395 நோயாளிகளுக்காக ரூபா 1,288.50 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் போது மருத்துவஉதவி பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை 478 இனால் அதாவது 5.69 சதவீதத்தினாலும், மருத்துவஉதவி செலவு ரூபா 65.63 மில்லியனினால் அதாவது 5.09 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| நோய் | 2017 ஆண்டு | | 2016 ஆண்டு | |
|---|---|---|---|---|
| | நபர்கள் எண்ணிக்கை | செலுத்திய தொகை | நபர்கள் எண்ணிக்கை | செலுத்திய தொகை |
| | | ரூபா மில்லியன் | | ரூபா மில்லியன் |
| இருதய சத்திர சிகிச்சை | 5,035 | 779.33 | 5,897 | 891.89 |
| புற்று நோய் | 497 | 84.48 | 635 | 81.55 |
| சிறுநீரக நோய் | 1,938 | 255.41 | 724 | 116.59 |
| மூலை சம்பந்தப்பட்ட நோய்கள் | 247 | 77.32 | 1,139 | 198.47 |
| ஏனையவை | 1,156 | 157.59 | | |
| | 8,873 | 1,354.13 | 8,395 | 1,288.50 |

(ஊ) மீளாய்வாண்டின் போது நிதியத்தினால் ரூபா 1,543.52 மில்லியனிற்கான தொகை மூதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 1,771.92 மில்லியன் தொகையான மூதலீடு திருப்பி பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், கடந்த ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிதியத்திடம் காணப்பட்ட முதலீட்டு மீதியில் ரூபா 228.4 மில்லியனிற்கான வீழ்ச்சி ஒன்றினை காட்டிய போதிலும், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிதியத்தின் வட்டி வருமானம் ரூபா 7.73 மில்லியனினால் அதிகரித்திருந்தது. இதற்காக ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் வட்டி சதவீதம் அதிகரித்திருத்தல் காரணமாக இருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

மருத்துவஉதவி செலுத்தும் போது நோயாளிகளின் வருமான நிலைமை போன்ற மூல பிரமாணங்கள் தொடர்பாக போதிய கவனம் செலுத்தப்படாமல் மருத்துவஉதவி வழங்கியிருந்த சந்தர்பங்கள் காணப்பட்டதென தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

### 4.3 பதவியணி நிருவாகம்

ஜனாதிபதியின் நிதியத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி ஒன்று காணப்பட்டதுடன், 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஜனாதிபதி செயலகத்தில் நிரந்தர சேவையில் கடமைபுரியும் உத்தியோகத்தர்களில் மேலதிக செயலாளர் ஒருவர், ஜனாதிபதி உதவிச் செயலாளர்கள் இருவர், கணக்காளர் ஒருவர் உட்பட 43 உத்தியோகத்தர்கள் நிதியத்தின் சேவைகளுக்காக விடுவிக்கப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு வருமானம் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்து போது 15 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையாலும் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

இணைப்பு 01

நிதியத்தின் வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பாக மற்றும் நிதியத்திற்கு உரிய பணம் முதலீடு செய்தல் மீதான கூற்று

(i) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் வருமானம் மற்றும் செலவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| விபரங்கள் | திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான | |
|---|---|---|
| | 2017 | 2016 |
| | ரூபா | ரூபா |
| **வருமானம்** | | |
| பங்களிப்புக்கள் பெறுவனவு | 88,175,917 | 63,010,454 |
| வட்டி வருமானம் | 202,289,639 | 187,773,079 |
| அபிவிருத்தி லொத்தர் சபையிலிருந்து பெறுவனவு * | 501,705,241 | 1,771,101,046 |
| திறைசேரியில் இருந்து பெறுவனவு ** | 772,877,300 | - |
| மொத்த வருமானம் | **1,562,048,097** | **2,021,884,579** |
| **செலவுகள்** | | |
| கணக்காய்வுக் கட்டணம் | 170,000 | 170,000 |
| மருத்துவஉதவி | 1,354,130,788 | 1,288,493,432 |
| பண்பாட்டு அலுவல்கள் | 3,400,000 | 3,800,000 |
| மத விவகாரங்கள் | 50,000 | 5,012,500 |
| நலன்புரி விவகாரங்கள் | 7,950,000 | ;9,632,000 |
| கல்வி விவகாரங்கள் | 109,000 | 2,350,000 |
| புலமைப் பரிசில் திட்டம் | 170,046,000 | 125,867,470 |
| விளையாட்டு மற்றும் கலை விவகாரம் | 1,000,000 | 2,974,500 |
| மஹபொல உயர்கல்வி பொறுப்பு நிதியத்திற்கு 50% பங்களிப்பு | 102,164,346 | 767,393,833 |
| மொத்த செலவு | 1,639,020,134 | 2,205,693,735 |
| வருமானம் (பற்றாக்குறை) | 76,972,037 | 183,809,156 |

* கடந்த ஆண்டுகள் தொடர்பான வருமான வரி மீளாய்வாண்டின் போது செலுத்த நேரிட்டிருந்தமையால் அபிவிருத்தி லொத்தர் சபையில் இருந்து கிடைக்கக்கூடிய வருமானம் குறைவடைவதற்கு காரணமாக இருந்தது.

** ஆண்டின் போது செலவுகள் மேற்கொள்வதற்காக போதியளவு வருமானம் கிடைக்காமையின் காரணமாக அமைச்சரவை அங்கீகாரத்துடன் மீளாய்வாண்டின் போது திறைசேரியில் இருந்து பெற்றிருந்த பணம்.

(ii) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதியத்திற்கு சொந்தமான பண முதலீடு செய்தல் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| முதலீட்டு வகை | 2017 ஜனவரி 01 திகதி உள்ளவாறு மீதி | 2017 ஆண்டின் போது முதலீடு செய்தல் | 2017 ஆண்டின் போது முதலீடுகளை விடுவித்தல் | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| தேசிய சேமிப்பு வங்கி – நிலையான வைப்புக்கள் | 1,470,294,000 | - | 1,470,074,000 | 220,000 |
| மக்கள் வங்கி – நிலையான வைப்புக்கள் | 120,792,341 | 1,543,520,345 | 120,792,341 | 1,543,520,345 |
| அபிவிருத்தி லொத்தர் சபையின் முதலீடுகள் | 2,200,000 | - | - | 2,200,000 |
| திறைசேரி பிணைமுறி | 338,790,000 | - | - | 338,790,000 |
| மீள்கொள்வனவு செய்தல் உடன்படிக்கை | 181,050,000 | - | 181,050,000 | - |
| | 2,113,126,341 | 1,543,520,345 | 1,771,916,341 | 1,884,730,345 |